



# தினப்புயல்

PTN news

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06





மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 01

# நியூசிலாந்து சம்பவத்துடன் தொடர்புடைய இலங்கையர் அடையாளம் காணப்பட்டார்





நியூஸிலாந்து. ஒக்லண்ட் நகரிலுள்ள சிறப்பங்காடியொன்றில் நேற்றைய தினம் 6 பேர் மீது கத்திக்குத்து தாக்குதல் நடத்திய இலங்கையர் ஒருவர் அந்நாட்டு காவல்துறையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்த நிலையில். இலங்கை புலனாய்வுதுறையினரால் முன்னெடுக்கப்படுகின்ற விசாரணைகளின் அடிப்படையில். குறித்த நபர் காத்தான்குடி பகுதியை சேர்ந்த முஹமது சம்சுதீன் ஆதில் என்ற 31 வயதுடையவர் என கண்டறியப்பட்டுள்ளது.

காத்தான்குடி. கபூரடி வீதியைச் சேர்ந்த குறித்த நபர் 1989 ஆண்டு பிறந்தவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. தாய். தந்தை. மூன்று சகோதரர்கள் உட்பட 6 பேரைக்கொண்ட குறித்த நபரின் குடும்பம். யுத்தம் காரணமாக 1990 ஆம் ஆண்டுகளின் பின்னர் கொழும்புக்கு இடம்பெயர்ந்துள்ளது. கொழும்பில் ஆரம்பத்தில் மொரட்டுவை பகுதியில் வசித்து வந்த அவர்கள். பின்னர் கொலன்னாவைக்கு இடம்பெயர்ந்துள்ளனர். இந்நபரின் தந்தை மற்றும் சகோதரி ஆகியோர் கனடாவிலும். சகோதரர்கள் இருவர் கட்டார் மற்றும் சவுதி அரேபியாவில் வசிப்பதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக காவல்துறையினர் குறிப்பிட்டுள்ளனர். இலங்கையில் உள்ள குறித்த நபரின் தாய். தற்போது காத்தான்குடியில் வசித்து வருவதாகவும் காவல்துறை விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந் நபர் கடந்த 2011 ஆம் ஆண்டு நியூஸிலாந்துக்கு சென்றுள்ளார். அங்கு சிரிய நாட்டவர் ஒருவருடன் தங்கியிருந்த நிலையில். அவர் மூலமாக அடிப்படைவாத கொள்கையுடைய நபராக மாறியிருக்கலாம் என விசாரணை அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். மேற்படி இலங்கையர் 10 ஆண்டுகளாக நியூஸிலாந்தில் வசித்து வந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலானது. பயங்கரவாத தாக்குதலாகும் என நியூஸிலாந்து பிரதமர் ஜசிண்டா ஆடெர்ன் நேற்று தெரிவித்தார். கொல்லப்பட்ட இலங்கையர். நீண்டகாலமாக கண்காணிப்பில் இருந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர். ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பின் அடிப்படைவாத சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதுடன். மேலதிக விசாரணைகள் தொடர்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மரக்கறி விநியோகிக்க விசேட வேலைத்திட்டம்

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு காரணமாக நாளை (05) மற்றும் நாளை மறுதினம் (06) கொழும்பு மாவட்டத்தில் உள்ள பொருளாதார மத்திய நிலையங்களில் விசேட வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக கொழும்பு மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது. நாளை மற்றும் நாளை மறுதினத்தில் நாட்டில் உள்ள பொருளாதார மத்திய நிலையங்களை திறந்து வைக்க திட்டமிடப்பட்டுள்ள நிலையில், வெளி மாவட்டங்களில் இருந்து கொழும்பு மாவட்டத்திற்கு மரக்கறிகளை கொண்டு வருவதற்கான விசேட வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மாவட்ட செயலாளர் பிரதீப் யசரத்ன குறிப்பிட்டார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், கொழும்பு மாவட்டத்தினுள் அமைந்துள்ள நாரஹேன்பிட, போகுந்தர மற்றும் மீகொட ஆகிய பொருளாதார மத்திய நிலையங்களை மொத்த விற்பனைக்காக திறக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த மத்திய நிலையங்களுக்கு வெளி மாகாணங்களில் இருந்து பொருட்களை கொண்டு வருவதற்கு விவசாயிகள் மற்றும் மற்றைய வர்த்தகர்களுக்கான வேலைத்திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, குறித்த விவசாயிகளின் உற்பத்திகளை கொண்டு வர தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விசேடமாக மீகொட பொருளாதார மத்திய நிலையத்தை கேந்திரமாகக் கொண்டு தம்புள்ளை, நுவரெலியா மற்றும் தம்புத்தேகம ஆகிய விவசாயிகளின் உற்பத்திகளை கொழும்பு, களுத்துறை மற்றும் காலி மாவட்டங்களுக்கு விநியோகிக்க நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றார்.

# காபூலில் தரையிறங்கிய முதலாவது உதவி விமானம்



ஆப்கானிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறிய பின்னர் நாடு தலிபான்களின் கட்டுப்பாட்டில் வந்துள்ள நிலையில், உணவுப் பொருள்களுடன் தலைநகர் காபூலில் உள்ள ஹமீத் கர்ஸாய் சர்வதேச விமான நிலையத்தில் ஐக்கிய அரபு அமீரகத்தின் முதல் விமானம் தரையிறங்கியது.

மிகப்பெரிய ஐக்கிய அரபு அமீரகத்தின் விமானம் சுமார் 60 டன் உணவுப் பொருள்களுடன் காபூல் விமான நிலையத்தில் வெள்ளியன்று தரையிறங்கியதாக தலிபன் செய்தித் தொடர்பாளர் ஸபியுல்லா முஜாஹித் தெரிவித்துள்ளார். இந்நிலையில் ஐக்கிய அரபு அமீரகம் அனுப்பியிருக்கும் உணவு பொருள்கள் ஆப்கானுக்கு மிக நல்ல செய்தியாக இருக்கும் என்றும், ஆப்கானை ஆதரிக்கும் சகோதர நாட்டுக்கு நாங்கள் எங்களது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை கடந்த 20 ஆண்டுகளாக ஆப்கானில் படைகளை நிலைநிறுத்தியிருந்த அமெரிக்கப் படைகள் திரும்பப் பெறப்பட்ட நிலையில் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றினர்.

இதையடுத்து, காபூல் விமான நிலையத்தை மீண்டும் செயல்பாட்டிற்கு கொண்டு வரும் பணியில் தலிபான்களுக்கு கத்தார் உதவி வருவதாக தகவல் வெளியான நிலையில் அங்கு நேற்று முதல் உள்நாட்டு விமான சேவைகள் தொடங்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முதலை வேட்டைக்காரனின் 15ஆவது நினைவு நாள் இன்று





உலகம் முழுவதும் முதலை வேட்டைக்காரன் என செல்லமாக அழைக்கப்பட்ட ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த விலங்கியல் ஆர்வலரான ஸ்டீவ் இர்வினின் (steve irwin) 15ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று. முதலை வேட்டைக்காரன் என செல்லமாக அழைக்கப்பட்டாலும், உண்மையில் அவர் முதலைகளின் காதலனே. டிஸ்கவரி, நேஷனல் ஜியோகிராபி உள்ளிட்ட சேனல்களை விரும்பிப் பார்த்த 90'ஸ் கிட்டுகளுக்கு இவர் மிகவும் பரீட்சயமானவர்.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த விலங்கியல் ஆர்வலரான ஸ்டீவ் இர்வின் (steve irwin) தான் அந்த "முதலைகளின் காதலன்". 1962 ஆம் ஆண்டு பிறந்த விக்டோரியா மாகாணத்தில் பிறந்த ஸ்டீவ் இர்வின் (steve irwin), முதலைகள் தொடர்பான பல்வேறு தொலைக்காட்சி ஆவணப்படங்கள் மூலம் உலகம் முழுவதும் பல கோடி ரசிகர்கள் மனதை வென்றிருந்தார். 1996 இல் ஒளி பரப்பான இவரது கிராக்கடைல் ஹன்டர் என்ற நிகழ்ச்சி உலகின் 130 நாடுகளில் ஒளிபரப்பாகின. மெக்சிகோ, ஆஸ்திரேலியா, ஆபிரிக்கா உள்ளிட்ட பல நாடுகளுக்கும் பயணம் மேற்கொண்டு முதலைகள், பாம்புகள் மற்றும் அரிய வகை மீன்கள் குறித்து ஆவணப்படங்கள் எடுத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார். கேமராவின் முன்பு தான் தனது இறப்பு இருக்க வேண்டும் என பல முறை நேர்காணல்களின் போது கூறிக் கொண்டிருந்த இர்வினுக்கு (steve irwin), அவரது வார்த்தைகளைப் போலவே வாழ்வின் இறுதி நிமிடங்களும் அமைந்ததுதான் பலருக்கு ம் வருத்தம்.

கடந்த 2006 ஆம் ஆண்டு செப்டம்பர் 4 ஆம் திகதி ஆவணப்படத்திற்கான படப்பிடிப்பின் போது திருக்கை மீன் வகையிலான sting ray மீனின் வால் குத்தியதில் எதிர்பாராத வகையில் மரணம் அடைந்தார். இந்நிலையில் இர்வினை (steve irwin)கௌரவிக்கும் விதமாக ஆண்டுதோறும் நவம்பர் 15 ஆம் திகதி 'ஸ்டீவ் இர்வின்' தினமாக ஆஸ்திரேலியாவில் கடைப்பிடிக்கப்படுகிறது. இதேவேளை இர்வினின் மறைவிற்குப் பிறகு அவரது மகன், மகள், மனைவி என ஒட்டுமொத்த குடும்பமும் அவர் விட்டுச்சென்ற பணியைத் தொடர்ந்து வருகின்றனர்.

## வியாபாரிகள் மீதான அபராதத் தொகை அதிகரிப்பு



நுகர்வோர் விவகார திருத்தச் சட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை (06) பாராளுமன்றத்தில் சமர்ப் பிக்கப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய பொருட்களின் விலையை வேண்டுமென்றே உயர்த்தும் மற்றும் கட்டுப்பாட்டு விலையை விட அதிகமாக விலைக்கு பொருட்களை விற்பனை செய்யும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக இந்த சட்டம் திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரவித்துள்ளார்.

அதனடிப்படையில் தனிநபர் வியாபாரத்திற்கான அதிகபட்ச அபராதம் 20,000 ரூபாவில் இருந்து 10 இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒரு நிறுவனத்திற்கான அதிகபட்ச அபராதம் 200,000 ரூபாவில் இருந்து 1 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தனிநபருக்கான குறைந்தபட்ச அபராதம் 1,000 ரூபாவில் இருந்து 10,000 ரூபாவாகவும், ஒரு நிறுவனத்திற்கான குறைந்தபட்ச அபராதம் 10,000 ரூபாவில் இருந்து 500,000 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## நாட்டில் மேலும் 2640 பேருக்கு கொவிட் தொற்று உறுதி



கொரோனா தொற்று உறுதியான மேலும் 2,640 பேர் இன்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனை தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனா தொற்று உறுதிப் படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 459,459ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2,310 பேர் இன்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 382,476 ஆக அதிகரித்துள்ளது.

## இலங்கை உள்ளிட்ட 10 நாடுகளுக்கு அனுமதி

இலங்கை உள்ளிட்ட 10 நாடுகளுக்கு விதித்துள்ள பயணத் தடையை நாளை மறுதினம் முதல் நீக்குவதற்கு பிலிப்பைன்ஸ் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

டெல்டா கொவிட் பரவல் காரணமாக கடந்த ஏப்ரல் மாதம் முதல் இலங்கை உள்ளிட்ட 10 நாடுகளில் இருந்து வருகை தரும் பயணிகளுக்கு அந்நாட்டு அரசாங்கம் தடை விதித்திருந்தது.

பயணத்தடை நீக்கப்பட்டதன் பின்னர் அந்நாட்டுக்கு வருபவர்கள் இரண்டு வாரம் தனிமைப்படுத்தலில் இருக்க வேண்டும் என பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## இலங்கை மத்திய வங்கியின் தகவல்




இலங்கையில் கடன் பெற்றவர்களுக்கான சலுகைக் காலத்தை நீடிப்பதற்கு மத்திய வங்கி தீர்மானித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடன் பெற்றவர்களுக்கான சலுகைக்காலத்தை நீடிப்பதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

நாட்டில் நிலவும் கொவிட் தொற்று பரவல் நிலை மற்றும் இதனால் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு காரணமாக இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

அதன்படி குறித்த விடயங்களால் பாதிக்கப்பட்டுள்ள வர்த்தகர்கள் மற்றும் தனிநபர்களுக்காக வழங்கப்பட்டுள்ள கடன் சலுகையை எதிர்வரும் டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை நீடிக்க இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் வங்கிகள் மற்றும் அனுமதி பெற்ற வணிக நிறுவனங்களுக்கு சுற்று நிருபத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட தரப்பினர் முன்வைத்த கோரிக்கைகளை அடிப்படையாக கொண்டு இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

கடன் பெற்ற, பாதிக்கப்பட்டவர்களின் கோரிக்கைக்கு அமைவாக வங்கிகள் இந்த சலுகையை வழங்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையின் கொவிட் நிலவரம் – 04.09.2021

**நாட்டில் நேற்றைய தினம் கொவிட் தொற்றால் 145 பேர் உயிரிழந்துள்ளனர். இதற்கமைய நாட்டில் பதிவான கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 9,951 ஆக அதிகரித்துள்ளது. நேற்று உயிரிழந்தவர்களில் 68 பெண்களும் 77 ஆண்களும் உள்ளடங்குவதாக அரசாங்க தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

**நாட்டில் மேலும் 4,725 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடந்த ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இந்த நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தொற்று நோய் ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.**

# கொரோனா நோயாளர்கள் அளவுக்கு அதிகமாக நோயெதிர்ப்பு மருந்துகளை உள்ளெடுப்பதை தவிர்க்கவும்

**கொவிட் தொற்றுக்கு உள்ளாகும் நபர்கள் அளவுக்கு அதிகமாக நோயெதிர்ப்பு மருத்துகளை பயன்படுத்துவதனை தவிர்க்குமாறு சுகாதார பிரிவு கோரிக்கை விடுத்துள்ளது. இதேவேளை, கொவிட் தொற்றால் உயிரிழக்கும் 30 வய திற்கு குறைவானவர்களின் எண்ணிக்கையில் அண்மைய நாட்களில் கனிசமான அளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதை காணக்கூடியதாகவுள்ளது. அதற்கமைய, கடந்த 4 நாட்களில் மாத்திரம், நாட்டில் 30 வயதுக்கு குறைவான 15 பேர் கொவிட் தொற்றால் மரணித்துள்ளனர்.**

**நேற்று பதிவான 202 கொவிட் மரணங்களில் 30 வயதுக்கு குறைவான 5 பேர் அடங்குவதாக அரச தகவல் திணைக்கள த்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே, கொவிட் தொற்றுக்கு உள்ளானவர்கள் முடியுமான அளவு ஓய்வெடுக்க வேண்டும் என விசேட வைத்தியர் பிரியங்கர ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.**

# தனித்தனிக் கட்சிகளாக செயற்படுவது எங்களை பலவீனப்படுத்துகிறது – மாவை சேனாதிராஜா

தமிழ் மக்களுடைய விடுதலைப் போராட்டத்தில் நாங்கள் தனித் தனியாக பிளவுபட்டு தனித்தனி கட்சிகளாக செயற்படுவது எங்களை பலவீனப்படுத்தி விடுமென தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார். அவருடைய இல்லத்தில் நடந்த ஊடக சந்திப்பிலே. தமிழ் தேசிய கூட்ட மைப்பிற்குள் பிளவுகள் ஏற்பட்டிருப்பதாகவும் தமிழரசுக் கட்சி தனித்தும் ஏனைய கட்சிகள் தனித்து இயங்கப் போவதாகவும் வெளியான செய் திகளின் உண்மைத்தன்மை தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும். இது ஒரு பொறுப்பற்ற ரீதியான பிரசாரம். நாங்கள் எல்லோரும் ஒன்றுபட்டு செயற்படவேண்டும். தமிழ் மக்களுடைய விடுதலைப் போராட்டத்தில் நாங்கள் தனித்தனியாக பிளவுபட்டு தனித் தனி கட்சிகளாக செயற்படுவது எங்களை பலவீனப்படுத்திவிடும். எங்க ளுடைய இலக்கை அடைய முடியாது. கொரோனா நேரத்தில் இவ்வா றான கருத்துக்களுக்கு இடமளிக்கக்கூடாது. மனித உரிமைப் பேரவையில் 46/1 என்கிற தீர்மானம் நிறைவேற்றப் பட்டு ஆறு மாதங்கள் கடந்துவிட்டது. எதிர்வரும் செப்டம்பர் மாதம் 13ம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் பச்லெற் அம்மையார் இலங்கை தொடர்பாக ஒரு முக்கியமான உரை யாற்றுவாரென எதிர்பார்க்கிறோம்.

சர்வதேச நெருக்கடியை சமாளிப்பதற்காக அரசாங்கம் ஒரு பேச்சுக்காக தாங்கள் மனித உரிமைப் பேரவையுடன் ஒத்துழைப்போமென கூறுவதை நாங்கள் நம்பி ஏமாந்துவிடக்கூடாது. மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர். நிறைவேற்றப் பட்ட தீர் மானமும் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு. கொடுத்த வாக்குறு திகள் எந்த அளவுக்கு நிறைவேற்றி இருக்கிறார்கள் என்பது தொடர்பில் உரையாற்றுவார் என கருதுகிறோம். அதையொட்டி தமிழரசுக் கட்சி. தமிழ் தேசியக் கூட்டமைப்பு. நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற தமிழ் தேசியத்தை வலியுறுத்தும் கட்சிகளும் ஒன்றுபட்டு மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு பின்னர் நடைபெறுகின்ற இலங்கை அரசாங்கத்தின் விரோதமாக இடம் பெறுகின்ற விடயங்கள் தொடர்பாக எங்கள் மதிப்பீட்டை நாங்கள் அனுப்ப வேண்டும்.

இது தொடர்பாக இரண்டு விதமான அபிப்பிராயங்கள் காணப்படுகின்றது. ஒன்று கட்சிகள் மத்தியில் நாங்கள் ஒரு நிலைப்பாட்டை அனுப்பி வைப்பது. இரண்டாவது பொது அமைப்புகளிடம் இருந்து கிடைக்கின்ற தகவல்கள் தயாரிப்புகளை மையமாக வைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சித் தலைவர் கையெழுத்திட்டு ஒரு அறிக்கையை அனுப்பி வைப்பது என்பதாகும்.



அநேகமாக அந்த அறி க்கை இன்று நண்பகலுக்கு முன்பு உருவாக்கப்பட்டிருக்கும்.அதை விட கட்சிகளின் சார்பிலே சில அறிக்கைகள் தயாரிக்கப் பட்டு இருக்கிறது.

நாங்கள் அனைவரும் ஒன்றுபட்டு அனுப்பவேண்டும். தனித்தனியாக கொடுக்கப் போகின்றோம் என்ற செய்திகளை தவிர்த்து தமிழ் தேசியத்தை அடிப்படையாகக் கொண்ட அக்கறையோடு செயற்படுகின்ற கட்சிகள் இன்று அல்லது நாளை மனித உரிமை ஆணையாளருக்கு அனுப்பி வைப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்று தெரிவித்தார்.

# நியூசிலாந்தில் 06 மாதத்திற்குப் பின்னர் ஒரு கொவிட் மரணம்

**நியூஸிலாந்தில் கடந்த 6 மாதங்களின் பின்னர் முதலாவது கொவிட்-19 மரணம் பதிவாகியுள்ளது. 90 வயதான பெண் ஒருவரே நேற்றிரவு உயிரிழந்ததாக வெளிநாட்டு ஊடகமொன்று தெரிவித்துள்ளது. இதன்படி, நியூஸிலாந்தில் கொவிட்-19 நோயால் மரணித்த 27 ஆவது நபராக அவர் பதிவாகியுள்ளார். கடந்த பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி கொவிட் மரணம் இறுதியாக பதிவானதை அடுத்து, ஆறு மாதங்களின் பின்னர் இந்த மரணம் இடம்பெற்றுள்ளது.**

**உடல்நலக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டிருந்த குறித்த பெண், ஒக்லாண்டில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்ற நிலையில் உயிரிழந்தார். இதேவேளை, டெல்டா திரிபு கட்டுப்பாட்டுக்குள் வரும் அறிகுறி தென்படுவதாக நியூஸிலாந்து சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**